
பரலோக
குடியிருப்பு
பாடம் 7 பிப்ரவரி 14, 2026



"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்."

பிலிப்பியர் 4:6

பவுல் தனது நிருபங்கள் முழுவதும், நாம் இந்த உலகத்தின் குடிமக்கள் அல்ல என்பதை தெளிவுப்படுத்துகிறார். இயேசுவை நமது இரட்சகராக ஏற்றுக்கொள்வதன் மூலம், நாம் மறுபடியும் பிறக்கிறோம். இந்த புதுப் பிறப்பின் மூலம், நாம் பரலோகத்தின் குடிமக்களாக மாறுகிறோம்.



இந்த உலகத்தின் சட்டங்களையும் விதிமுறைகளையும் நாம் மதித்து, அவற்றுக்கு கீழ்படிந்தாலும், உண்மையில், நமது வாழ்க்கைமுறை மிகவும் பரந்ததாகவும், உயர்ந்த ஒழுக்கமாகவும் இருக்கிறது.




**பரலோக குடியுரிமை:**

- உண்மையுள்ளவர்களை பின்பற்றுங்கள் (பிலிப்பியர் 3:17-19)
- முழு குடியுரிமை (பிலிப்பியர் 3:20-21)

**நாம் அங்கு செல்லும்வரை:**

- நல்லிணக்கம் மற்றும் மகிழ்ச்சி (பிலிப்பியர் 4:1-6)
- தூய சிந்தனைகள் (பிலிப்பியர் 4:7-9)
- மனநிறைவு (பிலிப்பியர் 4:10-13, 19)

# பரலோக குடியுரிமை

# உண்மையுள்ளவர்களை பின்பற்றுங்கள்


"சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்." (பிலிப்பியர் 3:17)

நம் அனைவருக்கும், ஏதோ ஒரு வகையில், நம் வாழ்க்கையையோ அல்லது நம் எண்ணங்களையோ வடிவமைத்தவர்கள் இருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் ஒரு கைவினை கலைஞரரகவோ, ஒரு ஒட்டபந்தய வீரராகவோ, ஒரு இசைக்கலைஞராகவோ, ஒரு பாடகராகவோ. ஒரு போதகராகவோ, ஒரு பிரசங்கியராகவோ, ஒரு உண்மையுள்ள சகோதரராகவோ அல்லது சகோதரியாகவோ இருக்கலாம்.



இந்த "முன்மாதிரி" நபர்கள் நாம் தனிநபர்களாக வளர உதவியிருக்கிறார்களா அல்லது நாம் ஒருபோதும் முயற்சிக்கக்கூடாத பாதைகளில் நம்மை வழிநடத்தி சென்றிருக்கிறார்களா?

நம்மை மேம்படுத்த ஊக்குவிக்கும் முன்மாதிரிகளை பின்பற்றும்படி பவுல் நம்மை அழைக்கிறார்(பிலிப். 3:17). விசுவாசிகளிடையே, பின்பற்ற தகுதியற்றவர்கள் இருக்கிறார்கள் என்றும் அவர் எச்சரிக்கிறார் (பிலிப். 3:18-19).



வித்தியாசம் என்ன? சிலர் பூமிக்குரிய விஷயங்களை பற்றி மட்டுமே சிந்திக்கிறார்கள், மற்றவர்கள் இயேசுவைப் பற்றியே சிந்திக்கிறார்கள். நல்ல முன்மாதிரிகள் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் (1 கொரி. 11:1).

# முழு குடியுரிமை

“நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.” (பிலிப்பியர் 3:20)






நாம் எதிர்கொள்வோம். கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஒரு பிரச்சனை இருக்கிறது: இரட்டை குடியுரிமை. நாம் இந்த உலகத்தின் குடிமக்களாகவும் இருக்கிறோம் பரலோக குடிமக்களாகவும் இருக்கிறோம். இது நமக்கு கடுமையான முரணபாடுகளை உருவாக்குகிறது (ரோ. 7:22-23).



நாம் எப்போது முழு குடியுரிமையை பெறுவோம்? இந்த பாவ உலக குடிமக்களாக இருப்பதை எப்போது நிறுத்துவோம்? இரண்டாம் வருகையில் (பிலிப். 3:20).

நாம் உயிர்தெழுப்பப்படும்போது, (அல்லது மறுரூபமாக்கப்படும் போது), மரணத்திற்கு நம் மீது எந்த அதிகாரமும் இல்லாத போது, என்ன நடக்கும்?



நமக்கொரு உடல் இருக்கும், நம் கண்கள் தேவனை காணும்(யோபு 19:25-27)

நமது சரீரம் ஆவிக்குரியது, அழியாதது, மற்றும் அழிக்கமுடியாதது (1 கொரி. 15:42-44, 50-54)

நாம் மகிமை அடைவோம்(கொலோ. 3:4; பிலிப். 3:21)


நாம் அங்கு செல்லும்வரை

# நல்லிணக்கம் மற்றும் மகிழ்ச்சி

"கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்." (பிலிப்பியர் 4:4)



பவுல் தனது நிருபத்தை முடிக்கும்போது, தனிப்பட்ட வாழ்த்துக்களை நடைமுறை ஆலோசனைகளுடன் பின்னி பிணைக்கிறார். யூதியாளும் சிந்திகேயாவும் ஒற்றுமையாக வாழ உதவுமாறு அவர் சிசிகஸ்(உண்மையுள்ள தோழர்) மற்றும் கிளேமெண்ட்டை கேட்கிறார். பவுலின் சகஊழியர்கள் அனைவருக்கும், அவர் கூறுவது என்னவென்றால்: "அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது" (பிலிப். 4:2-3).



பின்வரும் அறிவுரை நம்மை குழப்பமடைய செய்யலாம்: "எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் [...] நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல்,"(பிலிப். 4:4, 6). பிரச்சனைகளும் துயரங்களும் நிறைந்த உலகில் இது எப்படி சாத்தியமாகும்?

நமது மகிழ்ச்சி "கர்த்தருக்குள்" இருப்பதால் இது சாத்தியமாகும்(பிலிப். 4:4மு). அவர் நமக்காக அவற்றை தாங்கி கொள்வார் என்ற நம்பிக்கையுடன், நமது கவலைகளை அவர் மீது வைக்கிறோம்(மத். 6:31-34; 1 பேது. 5:7).



நம்முடைய கவலைகளை இயேசுவின் மீது எப்படி வைப்பது? ஜெபத்தின் மூலம் (பிலிப். 4:6).

# தூய சிந்தனைகள்

“கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.” (பிலிப்பியர் 4:8)

நமது கவலையை இயேசுவின் மீது போட்டு மகிழ்ச்சியடைவதன் விளைவு அமைதி (பிலிப். 4:7). உலகம் கொடுக்கவோ பறிக்கவோ முடியாத ஒரு சமாதானம் (யோவான் 14:27; 16:33).



இந்த சமாதானம், பவுலின்படி, நமது எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும்—ஒரு பாதுகாப்பாக—ஒரு காவலாக இருக்கும் (பிலிப். 4:7பி). இந்த பாதுகாப்பு பயனுள்ளதாக இருக்க, நாம் என்ன விஷயங்களை பற்றி சிந்திக்க வேண்டும் (பிலிப். 4:8)?

சுருக்கமாக: “புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.” (பிலிப் 4:8பி).



# மன நிறைவு

**"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்." (பிலிப்பியர். 4:19)**

நாம் மகிழ்ச்சியாயிருக்கிறோம்; எதுவும் நம்மை தொந்தரவு செய்வதில்லை; நமக்கு அமைதி இருக்கிறது; நம் எண்ணங்கள் தூய்மையானவை. நமக்கு ஒரு முழுமையான மற்றும் நிறைவான வாழ்க்கை இருக்கிறது... அல்லது நமக்கு இருக்கிறதா?

நமக்கு செழிப்பு இருக்கலாம்; நமக்கு தேவைகள் அல்லது பிரச்சனைகள் இருக்கலாம். பவுலைப் போலவே, தேவன் நம் வாழ்க்கையை வழிநடத்துகிறார் என்ற முழு நம்பிக்கை நமக்கு இருந்தால், நமது சூழ்நிலை என்னவாக இருந்தாலும் நாம் அவரில் நம்பிக்கையுடன் இருப்போம் (பிலிப். 4:11-12, 19).



ஆகூரைப் போலவே, தேவன் நமக்கு நன்மை பயக்கும் எதையும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தரமாட்டார் என்று நாங்கள் நம்புகிறோம் (நீதி. 30:8-9).

இந்த நம்பிக்கையுடன் நாம் வாழும்போது, நாம் உறுதியாக இருக்கிறோம் "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு." (பிலிப். 4:13).



# ம ன நி றை வு

**“என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.” (பிலிப்பியர். 4:19)**



**நமக்கு தேவை என்று நினைப்பது நம்மிடம் இல்லாத போது என்ன நடக்கும்?**

**நாம் இதை இறைவனிடம் கேட்போம், அது அவருடைய சித்தத்தின்படி இருந்தால், அவர் அதை நமக்கு அருளுவார் (யாக் 4:2பி; 1 யோவான் 5:14-15).**

**நாம் கேட்பது அவருடைய சித்தத்தின்படி இருக்கிறதா என்பது எப்போதும் தெரியாது, ஆனால் சில கோரிக்கைகள் எப்போதும் அவருடைய சித்தத்தின்படி இருக்கும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்:**



- **அன்புக்குரியவர் அல்லது நண்பருக்கு இரட்சிப்பு (1 தீமோ. 2:3, 4)**
- **நமது நம்பிக்கையை பகிர்ந்து கொள்ள தைரியம் (வெளி. 22:17)**
- **நாம் தவறுகளை ஒப்புக்கொண்டு விட்டுவிடும்போது மன்னிப்பு (1 யோவான் 1:9)**
- **தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படிய பலம் (எபி. 13:20, 21)**
- **நம்மை வெறுப்பவர்களிடமும், நம்மை துன்புறுத்துவோரிடமும் அன்பு செலுத்துதல் (மத். 5:44)**
- **சவாலான சூழ்நிலைகளுக்கான ஞானம் (யாக் 1:5)**
- **தேவனுடைய வார்த்தையில் உள்ள உண்மையை புரிந்துகொள்வது (யோ 8:32)**

“நாம் மறு உலகத்திற்காக வாழ வேண்டும். ஒரு சீரற்ற, குறிக்கோளற்ற வாழ்க்கையை வாழ்வது மிகவும் துரதிஷ்டவசமானது. வாழ்க்கையில் ஒரு பொருளை நாம் விரும்புகிறோம்—ஒரு நோக்கத்திற்காக வாழ வேண்டும். தேவன் நம் அனைவரையும் சுய தியாகம் செய்பவர்களாகவும் சுயநலம் குறைவாகவும், சுயநலத்தையும் மறந்துவிடுபவர்களாகவும் இருக்க உதவுவாராக; இங்கு நாம் எதிர்பார்க்கும் மரியாதைக்காக அல்ல, மாறாக அது நம் வாழ்க்கையின் குறிகோளாகவும், நம் இருப்பின் முடிவுக்கு பதிலளிக்கும் விதமாகவும் நன்மை செய்ய உதவுவாராக.”

எலன் ஜி உவைட் (அவர் ஹை காலிங், ஆகஸ்ட் 24)